**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – வன்கொடுமை தடுப்பு – 2022-2023 ஆம் ஆண்டிற்கு வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தீருதவி மற்றும் ஓய்வூதியங்கள் வழங்குவதற்காக ரூ.5.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து தனித்த சேமிப்பு கணக்கில் (SNA Account) வரவு வைத்து செலவு மேற்கொள்ள அனுமதியளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு (1)) துறை**

**அரசாணை (நிலை) எண்: 35**

**நாள் :16.05.2022**
**சுபகிருது வைகாசி 2-ஆம் நாள்**
**திருவள்ளுவராண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

1. ஒன்றிய அரசின் நிதி அமைச்சக அலுவக குறிப்பு ஆணை F.No.1(13)PFMS/FCD/2020- நாள் 23.03.2021.
2. அரசாணை (நிலை) எண்.4, ஆதி(ம)பந (கொடுதடு (1)) துறை, நாள். 02.02.2022.
3. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.க.எண். ஏ4/11474/ 2021, நாள் 09.02.2022.

-------------------

**ஆணை:-**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் தீருதவித் தொகை வழக்கின் தன்மைக்கேற்ப குறைந்தப்பட்சத் தொகையான ரூ.85,000/- லிருந்து ரூ.1.00 இலட்சமாகவும், அதிகபட்சத் தொகையாக ரூ.8,25,000/- லிருந்து ரூ.12,00,000/- மாகவும் உயர்த்தி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடிதத்தில் மேற்காணும் ஆணைக்கிற்கிணங்க உயர்த்தி வழங்கப்பட்ட தீருதவித் தொகையுடன் ஓய்வூதியமும் உடனுக்குடன் வழங்கப்பட வேண்டியுள்ளதால், 2021-2022 ஆம் ஆண்டில் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள மாநில

அரசின் தொகையான ரூ.15.00 கோடி மற்றும் மத்திய அரசின் பங்களிப்பு தொகையாக ஒதுக்கப்பட்டுள்ள ரூ.15.00 கோடி ஆகியவற்றுடன் கூடுதலாகத் தேவைப்படும் ரூ.5.12 கோடியை தனித்த சேமிப்பு கணக்கில் (SNA Account) வரவு வைத்து செலவினம் மேற்கொள்ள ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

3. மேற்காணும் ஆணையரின் கோரிக்கையின் அடிப்படையில் 2022- 2023-ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் 2235 01 200 UC 35102 என்ற கணக்குத் தலைப்பில் ஒப்பளிக்கப்பட்ட தொகையிலிருந்து முதல் கட்டமாக ரூ. 5.00 கோடி (ரூபாய் ஐந்து கோடி மட்டும்) தனித்த சேமிப்பு கணக்கில் (SNA Account) வரவு வைத்து செலவினம் மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல ஆணையருக்கு அனுமதியளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2235 சமூகப்பாதுகாப்பும் நலனும் - 01 மறுவாழ்வு - 200 ஏனைய துயர்த்தணிப்பு நடவடிக்கைகள் - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் - UC கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு நிதியுதவி - மாநில அரசின் பங்கு - 351 இழப்பீடு - 02 ஏனைய இழப்பீடுகள்"
>
> (IFHRMS த.தொ.கு. 2235 01 200 UC 35102)

5. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் Single Nodal Account கணக்கு தலைப்பில் வரவு வைக்கப்படவேண்டும்.

| | |
|---|---|
| Bank Name | Axis Bank |
| Branch Name | Mylapore |
| Account Name | Commissioner of Adi Dravidar Welfare Department |
| Account Number | 921010024038332 |
| IFSC code | UTIB0000006 |

6. மேற்படி ஒப்பளிக்கப்பட்ட தொகையினை மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட ஒன்றிய அரசின் நிதி அமைச்சக அலுவலக குறிப்பாணையில்

உள்ள நடைமுறைகளை பின்பற்றி விடுவிக்குமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.22531/நிதித் (ஆதி(ம)பந)துறை/2022, நாள் 12.05.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**( ஆளுநரின் ஆணைப்படி)**

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

**பெறுநர்**

ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
கூடுதல் காவல்துறை இயக்குநர், சமூக நீதி (ம)மனித உரிமைகள்,
சென்னை-600 004
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை / 600 035.
மாநில கணக்காயர், சென்னை - 600 018/35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 600 0001.

**நகல்**

முதலமைச்சரின் செயலாளர், தலைமைச் செயலகம்,சென்னை-600 009.
அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்)அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர்,
தலைமைச் செயலகம்,சென்னை- 600 009.
இயக்குநர், தேசிய ஆதிதிராவிடர் நல ஆணையம், சென்னை – 600 006.
இயக்குநர், பழங்குடியினர் நல ஆணையம், சென்னை-600 006
நிதித்(ஆதி(ம)பந)வ.செ.பொ.I/வ.செ.பொ.II/வ.வ.I)துறை, சென்னை – 600 009.
சிறப்பு திட்டச் செயலாக்கத் துறை, சென்னை – 600 009.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

16/5/22

**தேர்வு நிலை பிரிவு அலுவலர்**

16/5/2022